Ind

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை – திருமதி அ.ரெஜினி, இளநிலை உதவியாளர், த/பெ. (அமரர்) திரு.ரா.அசோகன், ராஜாக்கமங்கலம் துறை, ஆரம்ப சுகாதார நிலையம், நாகர்கோவில் சுகாதாரப் பகுதி மாவட்டம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மருத்துவம் –மக்கள் நல்வாழ்வுத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண்.1

நாள்.05.01.2022

பிலவ, மார்கழி – 21

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.10137/ப.தொ.4/இரு.3/2019, நாள் 09.07.2020.

******

ஆணை:

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் நாகர்கோவில் மாவட்ட பணிமனையில் (சுகாதாரம்) பொருத்துநர் நிலை–2ஆகப் பணியாற்றி வரும்போது 18.03.2006 அன்று பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் திரு.ரா.அசோகன் என்பவரின் மகள் திருமதி அ.ரெஜினி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு நாகர்கோவில் சுகாதாரப் பகுதி மாவட்டம், ராஜாக்கமங்கலம் துறை, ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியில் இணைந்தார். அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 03.06.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துரு, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-இல் வெளியிடப்பட்டுள்ள விரிவான வழிகாட்டுதல்களின்படி ஆய்வு செய்யப்பட்டது. இந்நேர்வில் தனியர் திருமதி அ.ரெஜினி கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி 17.09.2007 அன்று சமர்ப்பித்த விண்ணப்பமானது அரசுப் பணியாளர் மரணமடைந்த மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்பட்டிருந்தாலும், அச்சமயத்தில் தனியர் 18 வயதினை நிறைவு செய்யவில்லை. எனவே, மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில் தனியருக்கு வழங்கப்பட்ட பணி நியமனமானது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இன் சட்டப் பிரிவு 20(6)(b)க்கு முரணானதாகும். தனியர் அவரது தகப்பனார் திரு.ரா.அசோகன் என்பவர் 18.03.2006 அன்று பணியிடை மரணமடைந்தபோதும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் சமர்ப்பித்தபோதும் மறைந்த அரசு ஊழியரின் திருமணமாகாத மகள் ஆவார். மேலும், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020இன்படி, பணியிடை மரணமடைந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டிருந்தாலும் அதற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15இல் வழிவகை செய்யப்படவில்லை. மேலும், நிருவாகக் காரணங்களால் தனியருக்கு பணி நியமனம் வழங்க காலதாமதமான நிலையில் அவருக்கு 30.10.2014 அன்று திருமணம் நடைபெற்றுள்ளது. அதன் பின்பு, அரசாணை (நிலை) எண்.165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு2) துறை, நாள் 30.08.2010, அரசாணை (நிலை) எண்.96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு-1) துறை, நாள் 18.06.2012 மற்றும் அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 10.12.2014 ஆகியவற்றின் அடிப்படையில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.10137/பதொ.4/இரு3/2019, நாள் 27.05.2019 இன்படி கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு தனியர் 03.06.2019 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார்.

3. எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு நாகர்கோவில் சுகாதாரப் பகுதி மாவட்டம், ராஜாக்கமங்கலம்துறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வரும் திருமதி அ.ரெஜினி என்பவரின் தற்காலிகப் பணியினை, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020ற்கு விலக்களித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, (தமிழ்நாடு சட்டம் 14/2016)இல், சட்டப் பிரிவு 58இன்கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள

அதிகாரத்தின்படி சட்டப் பிரிவுகள் 15, 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை தனியர் பொருட்டு தளர்வு செய்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 03.06.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து, பணப்பலன்களை பணி நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பெற்று வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இல் பிரிவு 58-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி அ.ரெஜினி என்பவரின் தற்காலிகப் பணிநியமனத்தினை அவர் பணியில் இணைந்த நாளான 03.06.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து பணப்பலன்களை பணிநியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பெற்று வழங்க ஏதுவாக மேற்படி சட்டத்தின் பிரிவுகள் 15, 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை திருமதி அ.ரெஜினி பொருட்டு தளர்த்தி ஆணையிடுகிறார்.

5. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.21080/க்யூ1/2021, நாள் 12.03.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.9311/ஜி2/2021-1, நாள் 29.03.2021 ஆகியவற்றின் ஒப்புதலோடு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை-600 006.
தனியர், (இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை-600 006 வழியாக.)
மாநிலக் கணக்காயர், சென்னை-600 018.
மாவட்ட கருவூல அலுவலர், நாகர்கோவில் மாவட்டம்.

<u>நகல்</u>

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு/உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

12/01/2022
பிரிவு அலுவலர்.